செய்தி வெளியீடு எண். 81-2017 நாள்: 27.10.2017

# விழுப்புரம் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை முதன்மை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

*****

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், டெங்கு காய்ச்சல் தடுப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை முதன்மை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.10.2017) ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தாவது:

தமிழக அரசின் ஆணைக்கிணங்க, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் டெங்கு தடுப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு, கொசு ஒழிப்புப் பணிகள், பொதுமக்கள் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, வீடுகள், அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், திரையரங்குகள், திருமண மண்டபங்கள், உணவகங்கள், தங்கும் விடுதிகள், குடியிருப்புகள், பேருந்து மற்றும் இரயில் நிலையங்கள், வணிக வளாகங்கள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும், டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாகாமல் தடுக்கும் பொருட்டு, அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், சுகாதாரத்துறை, உள்ளாட்சித்துறை, கல்வித்துறை, வருவாய்த்துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து, கொசு ஒழிப்பு மற்றும் துப்புரவுப் பணிகள் தினசரி காலை 06.00 மணி முதல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏடிஸ் கொசுப்புழுக்கள் கண்டறியப்படும் இடங்களின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை நோட்டீஸ் வழங்கப்பட்டு, சில இடங்களில் அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

தற்போது, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலர்கள், தனியார் நிறுவன உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும், எதிர்வரும் மூன்று தினங்களில் (சனி, ஞாயிறு மற்றும் திங்கள்) ஏடிஸ் கொசுப்புழுக்கள் இல்லாமல் தங்கள் வீடுகள், அலுவலகங்கள் மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிக்கவும், குடிநீர் தொட்டிகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளை சுத்தம் செய்யவும் கால அவகாசம் வழங்கப்படுகிறது. இந்த பணிகளை மேற்கொள்வதற்காக பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்படும் நேரம் குறித்து முன்னரே தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் வீட்டில் உள்ள தொட்டிகளை பிளீச்சிங் பவுடர் கொண்டு தூய்மைப்படுத்த ஏதுவாக மதிய நேரங்களில் குடிநீர் வழங்கப்பட உள்ளது.

இந்த மூன்று தினங்களுக்குள் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை அப்புறப்படுத்தி சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிக்கத் தவறும் தனியார் மற்றும் அரசு

நிறுவனங்கள், பொதுமக்களுக்கு நோட்டீஸ் மற்றும் அபராதம் விதிக்கப்படுவதுடன், குடிநீர் இணைப்பு துண்டிப்பு உள்ளிட்ட கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனவே, பொதுமக்கள் மற்றும் அனைத்து நிறுவனங்களும் தங்களுடைய வீடுகள் மற்றும் அலுவலக வளாகங்களில் டெங்கு கொசுப்புழுக்கள் உற்பத்தியாகக் கூடிய அனைத்து இடங்களையும் கண்டறிந்து அப்புறப்படுத்துமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, சார் ஆட்சியர்கள் திருமதி.சாருஸ்ரீ,இ.ஆ.ப., செல்வி.மெர்சி ரம்யா,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வி.மகேந்திரன், மகளிர் திட்ட இயக்குநர் திரு.சுந்தர்ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அனுசுயாதேவி, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர்.வனிதாமணி, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் டாக்டர்.ராஜேந்திரன், துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) டாக்டர்.சவுண்டம்மாள், டாக்டர்.ஜெமினி, வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி.சரஸ்வதி, திருமதி.மல்லிகா மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.